ந.க. 05706

தமிழ் வளர்ச்சி இயக்ககம்
26 மே 2008

<u>சுருக்கம்</u>

தமிழ் வளர்ச்சி – நூல்கள் நாட்டுடைமை – 2008–09–ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்பு – 27 தமிழ்ச் சான்றோர்களின் அனைத்து படைப்புகளும் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்களது மரபுரிமையர்களுக்கு பரிவுத்தொகை வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது

---

தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித் (தவ1–1) துறை

அரசாணை (நிலை) எண்.167

நாள் 22.5.2008
திருவள்ளுவராண்டு 2039
வைகாசி 9

1. அரசு நேர்முக கடித எண்.11423/தவ1–1/2008–1, நாள் 28.3.2008
2. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடித எண்.3233/தமிழ்1/2008, நாள் 9.4.2008

========

<u>ஆணை</u>

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், 20.3.2008அன்று 2008–09–ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் கீழ்க்கண்டவாறு அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இந்த ஆண்டு 1. கவிஞர் பெரியசாமித் தூரன், 2. பேராசிரியர் க.வெள்ளைவாரணனார், 3. பண்டிதர் க.அயோத்திதாசர், 4. திரு.ஆபிரகாம் பண்டிதர், 5. திரு.சதாவதானி செய்குத்தம்பிப் பாவலர், 6. டாக்டர் ரா.பி.சேதுப்பிள்ளை, 7. மகாவித்வான் ரா.ராகவையங்கார், 8. திரு.உடுமலை நாராயணகவி, 9. திரு. கு.மு. அண்ணல் தங்கோ, 10. திரு.அவ்வை தி.க.சண்முகம், 11. திரு.விந்தன், 12. திரு.லா.ச.ராமாமிர்தம், 13. திரு.வல்லிக்கண்ணன், 14. திரு.நா.வானமாமலை, 15. கவிஞர். புதுவைச் சிவம், 16. திரு.அ.இராகவன், 17. திரு.தொ.மு.சி.ரகுநாதன், 18. திரு.சக்திதாசன் சுப்ரமணியன், 19. டாக்டர் ந.சஞ்சீவி, 20. திரு.முல்லை முத்தையா, 21. கவிஞர் எஸ்.டி.சுந்தரம், 22. கவிஞர் மீரா, 23. பேராசிரியர் ஆ.கார்மேகக் கோனார், 24. புலவர் முகமது நயினார் மரைக்காயர், 25. திரு.கு.சமுத்திரம், 26. திரு.கோவை இளஞ்சேரன், 27. பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் ஆகிய தமிழ்ச் சான்றோர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு, அவர்கள் உருவாக்கிய நூல்களின் எண்ணிக்கை அவை

சமுதாயத்தில் ஏற்படுத்திய தாக்கம், அவற்றின் பெருமை முதலியவற்றின் அடிப்படையில் அவர்தம் மரபுரிமையர்களுக்குப் பரிவுத் தொகை வழங்கப்படும்.

2. மேற்கண்ட அறிவிப்பினைத் தொடர்ந்து, இப்பொருண்மை தொடர்பாக தமிழ் வளர்ச்சி இயக்குநரிடமிருந்து விரிவான அறிக்கை பெறப்பட்டது.

3. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, இவ்வரசாணையின் இணைப்பில் காணும் 27 தமிழ்ச் சான்றோர்களின் இலக்கியப் படைப்புகள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கி பரிவுத்தொகையாக ஒவ்வொருவரின் மரபுரிமையர்களுக்கும் இவ்வரசாணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வழங்கும் பொருட்டு ரூ.1,65,00,000/– (ரூபாய் ஒரு கோடியே அறுபத்தைந்து இலட்சங்கள் மட்டும்) ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட மொத்த தொகை ரூ.1,65,00,000/– (ரூபாய் ஒரு கோடியே அறுபத்தைந்து இலட்சங்கள் மட்டும்) கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்:-

> "2202. பொதுக்கல்வி – 05. மொழி வளர்ச்சி–800. ஏனைய செலவுகள் – II மாநிலத் திட்டம் – JE தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள். பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநர் பொறுப்பில் உள்ளவை – 09. உதவி மானியங்கள் – 03. குறிப்பிட்டத் திட்டங்களுக்கான உதவித்தொகை
> (த.தொ.கு.2202 05 800 JE 0933)

5. பரிவுத் தொகையைப் பெறவரும் மரபுரிமையர்களின் குடும்பத்தினர் சென்னை வந்து செல்லும் போக்குவரத்துச் செலவு மற்றும் ஏனைய செலவினத்துக்காக ஒவ்வொரு தமிழறிஞரின் மரபுரிமையருக்கும் ரூ.5,000/– (ரூபாய் ஐயாயிரம் மட்டும்) வீதம் மொத்தம் 27 பேருக்கு ரூ.1.35 இலட்சம் (ரூபாய் ஒரு இலட்சத்து முப்பத்தைந்தாயிரம் மட்டும்) ஒப்பளித்து அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5இல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படும்:-

> "2202. பொதுக்கல்வி –05. மொழி வளர்ச்சி–800. ஏனைய செலவுகள் –II மாநிலத் திட்டம் – JE தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநர் பொறுப்பில் உள்ளவை –05. அலுவலகச் செலவுகள் –02. ஏனைய சில்லறைச் செலவுகள்."
> (த.தொ.கு.2202 05 800 JE 0522)

7. மேலே பத்தி 3 மற்றும் 5–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள கூடுதல் நிதியொதுக்கம் 2008–09–ம் ஆண்டுக்கான திருத்த / இறுதி திருத்த மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். மேற்காணும் செலவினத்திற்கான கருத்துருவை நிதித் (கூ.உ.(ம)நு.பா) துறைக்கு தக்க தருணத்தில் அனுப்பி வைக்குமாறு இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8 அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

8. மேலே பத்தி 3 மற்றும் 5–இல் ஒப்பளிக்கப்பட்ட தொகைக்கான பட்டியல்கள் உரிய அலுவலரால் சமர்ப்பிக்கப்படும்போது, அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில் அவற்றை அனுமதிக்குமாறு சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை–600001 அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

9. மேலே பத்தி 3 மற்றும் 5இல் ஒப்பளிக்கப்பட்ட பரிவுத்தொகை மற்றும் சில்லறைச் செலவினத் தொகையை தமிழ்நாடு நிதி விதித் தொகுப்பு தொகுதி 1 பிரிவுக்கூறு 99–இன்கீழ் முன்பணமாகப் பெறவும், மேற்குறிப்பிட்டுள்ள செலவினங்களை மேற்கொள்ளவும் உரிய பற்றுச்சீட்டுகள் மூலம் முன்பணத் தொகைக்கான பட்டியலை நேர் செய்யவும் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு ஆசு அனுமதி அளிக்கிறது.

10. வருவாய்த் துறையினரின் மரபுரிமையர் சான்றுகளின் அடிப்படையில் உரிய மரபுரிமையர்களுக்கு மேற்கண்ட தொகையை பகிர்ந்தளிக்க தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

11. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.30329/CF&CP/2008–1, நாள் 21.5.2008--இல் பெற்ற இசைவு மற்றும் கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண்.137 (நூற்று முப்பத்து ஏழு) உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

வெ.இறையன்பு
அரசுச் செயலாளர் (கூ.பொ)

<u>பெறுநர்</u>
இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8.
27 தமிழறிஞர்களின் குடும்பத்தினர்கள்
(தமிழ் வளர்ச்சி இயக்ககம் மூலம்)
சம்பளக் கணக்கு அலுவலர்(வடக்கு), சென்னை–1.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–18/35.
<u>நகல்</u>
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
நிதி (த.வ.அறி (ம) செ./ வ.செ.பொ I / வ.செ.பொ II)துறை, சென்னை–9.
இ.கோ/உதிரி

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர். 23/5/08

## இணைப்பு

**அரசாணை (நிலை) எண்.167, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (தவ1–1) துறை, நாள் 22.5.2008**

| வ. எண் | தமிழ் சான்றோர்களின் பெயர் திருவாளர்கள் | ஒப்பளிக்கப்பட்ட பரிவுத் தொகை |
|---|---|---|
| 1 | கவிஞர் பெரியசாமித் தூரன் | ரூ.10.00இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) |
| 2. | பேராசிரியர் க.வெள்ளைவாரணனார் | ரூ.10.00 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) |
| 3. | பண்டிதர் க.அயோத்திதாசர் | ரூ.10.00 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) |
| 4. | திரு.ஆபிரகாம் பண்டிதர் | ரூ.10.00 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) |
| 5. | திரு.சதாவதானி செய்குத்தம்பிப் பாவலர் | ரூ.10.00 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) |
| 6. | டாக்டர் ரா.பி.சேதுப்பிள்ளை | ரூ.10.00 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) |
| 7. | மகாவித்வான் ரா.ராகவையங்கார் | ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) |
| 8. | திரு.உடுமலை நாராயணகவி | ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) |
| 9. | திரு.கு.மு.அண்ணல் தங்கோ | ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) |
| 10. | திரு.அவ்வை தி.க.சண்முகம் | ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) |
| 11. | திரு.விந்தன் | ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) |
| 12 | திரு.லா.ச.ராமாமிர்தம் | ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) |
| 13 | திரு.வல்லிக்கண்ணன் | ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) |
| 14 | திரு.நா.வானமாமலை | ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) |

| | | |
|---|---|---|
| 15 | கவிஞர்.புதுவைச் சிவம் | ரூ.5.00 இலட்சம்<br>(ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) |
| 16 | திரு.அ.இராகவன் | ரூ.5.00 இலட்சம்<br>(ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) |
| 17 | திரு.தொ.மு.சி.ரகுநாதன் | ரூ.5.00 இலட்சம்<br>(ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) |
| 18 | திரு.சக்திதாசன் சுப்ரமணியன் | ரூ.5.00 இலட்சம்<br>(ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) |
| 19 | டாக்டர் ந.சஞ்சீவி | ரூ.5.00 இலட்சம்<br>(ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) |
| 20 | திரு.முல்லை முத்தையா | ரூ.5.00 இலட்சம்<br>(ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) |
| 21 | கவிஞர் எஸ்.டி.சுந்தரம் | ரூ.5.00 இலட்சம்<br>(ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) |
| 22 | கவிஞர் மீரா | ரூ.5.00 இலட்சம்<br>(ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) |
| 23 | பேராசிரியர் ஆ.கார்மேகக் கோனார் | ரூ.5.00 இலட்சம்<br>(ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) |
| 24 | புலவர் முகமது நயினார் மரைக்காயர் | ரூ.5.00 இலட்சம்<br>(ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) |
| 25 | திரு.சு.சமுத்திரம் | ரூ.5.00 இலட்சம்<br>(ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) |
| 26 | திரு.கோவை இளஞ்சேரன் | ரூ.5.00 இலட்சம்<br>(ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) |
| 27 | பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் | ரூ.5.00 இலட்சம்<br>(ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) |

வெ.இறையன்பு
அரசுச் செயலாளர் (கூ.பொ)

/ உண்மை நகல் /

பிரிவு அலுவலர். 23/5/08

## தமிழ்நாடு அரசு

### சுருக்கம்

தமிழ் வளர்ச்சி – நூல்கள் நாட்டுடைமை – 2009–10–ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்பு – 21 தமிழ்ச் சான்றோர்களின் அனைத்து படைப்புகளும் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்களது மரபுரிமையர்களுக்கு பரிவுத்தொகை வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (தவ.1–1) துறை

அரசாணை (நிலை) எண்.119 — நாள்: 02.06.2009
திருவள்ளுவராண்டு 2040
வைகாசி 19

படிக்க:

1. அரசு நேர்முக கடித எண்.5130/தவ1–1/2009–1, நாள் 19.02.2009
2. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடித எண்.1007/தமிழ்1/2009, நாள் 27.02.2009 மற்றும் 05.05.2009

---

ஆணை

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், 2009–10–ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் கீழ்க்கண்டவாறு அறிவிப்பு வெளியிடப்பட்டது:-

இந்த ஆண்டு 1. குழந்தைக்கவிஞர் அழ.வள்ளியப்பா, 2. கவியரசு கண்ணதாசன், 3. பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை, 4. பண்டிதமணி மு. கதிரேசஞ் செட்டியார், 5. மு.இராகவையங்கார், 6. பம்மல் சம்பந்தனார், 7. அ.சிதம்பரநாதன் செட்டியார், 8. மு.சு.பூரணலிங்கம்பிள்ளை, 9. தொ.மு.பாஸ்கரத் தொண்டைமான், 10. பாலூர் கண்ணப்பமுதலியார், 11. இராய. சொக்கலிங்கனார், 12. டாக்டர் மு. வரதராசனார், 13. முனைவர் ச. அகத்தியலிங்கம், 14. பாவலர் நாரா. நாச்சியப்பன், 15. புலியூர்க்கேசிகன், 16. எழுத்தாளர் சாண்டில்யன், 17. எழுத்தாளர் வை.மு.கோதைநாயகி, 18. சின்னஅண்ணாமலை 19. பூவை எஸ். ஆறுமுகம், 20. என்.வி.கலைமணி, 21. கவிஞர் முருகுசுந்தரம், 22. புலவர் த. கோவேந்தன், 23. எழுத்தாளர் சுந்தர ராமசாமி, 24. திருக்குறள்மணி அ.க. நவநீத கிருட்டிணன், 25. இலட்சுமி, 26. வடுவூர் துரைசாமி ஐயங்கார், 27. ஜமதக்னி மற்றும் 28. ஜெ. ஆர். ரங்கராஜு ஆகிய தமிழ்ச் சான்றோர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு, அவர்கள் உருவாக்கிய நூல்களின் எண்ணிக்கை அவை சமுதாயத்தில் ஏற்படுத்திய தாக்கம், அவற்றின் பெருமை ஆகியவற்றின் அடிப்படையில் அவர்தம் மரபுரிமையர்களுக்குப் பரிவுத் தொகை வழங்கப்படும்.